சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 -ம் நாள் செவ்வாய்கிழமை

அசல் வழக்கு எண்.153/2022

**CNR No.TNSV030002372022**

...

சிட்டி யூனியன் பேங்க் லிமிடேட்,
சிவகங்கை டவுன்,
அதன் கிளை மேலாளர் மூலம். ...வாதி

..எதிர்..

1) இ. மூர்த்தி
2) க.மணிகண்டன் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 19.07.2022-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிக்காக வழக்குரைஞர் திரு.ஆர்.பிரபாகர் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானித்தும், வாதி தரப்பு வாதுரை கேட்டும் இதுநாள் வரை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

இவ்வழக்கு வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தொகை ரூ.3,51,903/- ஐ செலுத்த வேண்டும் என்றும் அதில் அசல் தொகை ரூ.75,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 13.75 % வருட வட்டி சேர்த்து பிரதிவாதிகள் செலுத்தவேண்டும் என்றும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சுருக்கம்-**

பிரதிவாதிகள் கல்விக்கடனாக ரூ.75,000/- கோரி வாதி வங்கியில் 17.11.2009 அன்று கடன் விண்ணப்பம் அளித்தனர். மேற்படி கடன் தொகையை பிரதிவாதிகள் ஒழுங்காகவும் முறையாகவும் திருப்பி செலுத்துவதாக ஒப்புக் கொண்டார்கள். வாதி வங்கிக்கு பிரதிவாதிகளால் 17.11.2009 அன்று வழங்கப்பட்ட Demand Promissory Note தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் மேற்படி கடனுக்கு ஆதரவாக 25.10.2012, 30.09.2015 மற்றும் 05.09.2018 ஆகிய தேதிகளில் வாதி வங்கிக்கு Revival Letter எழுதிக்கொடுத்துள்ளார்கள். மேலும் பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு 17.11.2009 முதல் 17.08.2021- வரை ரூ.3,51,903/- ஐ திருப்பி செலுத்த வேண்டியதாக உள்ளது. பிரதிவாதிகள் வாதி வங்கியில் கடன் பெற்று ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ள ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வட்டி வீதமும் வங்கி விதிப்படி மாறும் நிலவரத்திற்கு ஏற்ப திரும்ப செலுத்த பிரதிவாதிகள் கடமைப்பட்டுள்ளார்கள். மேற்படி கடன் தொகையை முறையாக செலுத்தாத பட்சத்தில் கூட்டு வட்டியும் அதற்குரிய தண்ட வட்டியும் தருவதாக ஒப்புக்கொள்ளப்பட்டு பிரதிவாதிகளால் ஆவணங்கள் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வாதி வங்கியால் நேரிலும் ஆட்கள் மூலமாகவும் பலமுறை கடன் தொகையை செலுத்தி வைக்குமாறு பிரதிவாதிகளை கேட்ட போதிலும் கடன் தொகையை திருப்பி செலுத்த மறுத்துவிட்டனர். பிரதிவாதிகள் இதுவரை எந்த விதமான தொகையையும் வாதி வங்கியில் செலுத்தி வைக்கவில்லை. பிரதிவாதிகள் கடன் ஒப்பந்தத்தை மீறி வாதி வங்கியின் கடன் தொகையினை மோசடி செய்யும் வகையில் நடந்து வருவதால் பிரதிவாதிகள் கடன் பாக்கியை செலுத்தி கடன் கணக்கினை முடித்துக்கொள்ளுமாறு பலமுறை வாதி வங்கி தரப்பில் தொடர்ந்த போதிலும் பிரதிவாதிகள் கடன் பாக்கியினை செலுத்தி வைக்க முன்வரவில்லை. எனவே பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு 17.11.2009 முதல் 17.08.2021- வரை செலுத்தி வைக்கவேண்டிய தொகை ரூ.3,51,903/- ஐ ஒப்புக்கொண்ட வட்டிக்கு நின்ற பின்வட்டி சேர்த்து செலவுத்தொகையுடன் வரப்பெறுவதற்காக பிரதிவாதிகள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. <u>பிரச்சினை</u>-

வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா ?

**5.** இவ்வழக்கில் வாதி வங்கியின் தரப்பில் வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் எதுவும் இல்லை. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

<u>6. பிரச்சினைக்கான தீர்வு-</u>

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை டவுனில் அமைந்துள்ள சிட்டி யூனியன் வங்கியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கியில் 1ம் பிரதிவாதியின் கல்விக்கட்டணம் செலுத்துவதற்காக கடன் பெறப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான 2-ம் பிரதிவாதி கடனை திரும்ப செலுத்துவதாக கடன் ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார். அசல் மற்றும் வட்டி தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள 1 மற்றும் 2 பிரதிவாதிகள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கிக்கு 17.11.2009 முதல் 17.08.2021 வரை ரூ.3,51,903/- செலுத்த வேண்டியுள்ளது என்றும் மேலும் தொடர்ச்சியாக வட்டியும் செலுத்த கடமைப் பட்டுள்ளார்கள் என்பதும் வாதி தரப்பு வழக்காகும்.

7. வாதி தனது வழக்கினை வா.சா.1 வாய்மொழி சாட்சியம் வாயிலாகவும், வா.சா.1 முதல் வா.சா.6 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் எடுத்துரைத்துள்ளார். பிரதிவாதிகள் கல்விக்கடனாக ரூ.75,000/-கோரி வாதி வங்கியில் 17.11.2009 அன்று கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஐ அளித்தனர். மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் Demand Promissory Note வா.சா.ஆ.2-ம், 25.10.2012, 30.09.2015 மற்றும் 05.09.2018 ஆகிய தேதிகளில் Revival Letter வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5- வரையிலான ஆவணங்களும் எழுதிக்

கொடுத்துள்ளார்கள். 18.08.2021-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை குறித்த Statement of Account வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களையோ அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களையோ பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் எழுப்பப்படவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதிகளால் வாதி வங்கிக்கு ஆதரவாக எழுதிக் கொடுக்கப்பட்டதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். இந்த ஆவணங்களை சந்தேகிப்பதற்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை. ஆவணங்களுக்கு முரண்பட்ட சாட்சியங்கள் இல்லை. எனவே இந்த ஆவணங்கள் பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சான்றாவணங்களாக இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

**8**. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை மறுத்து எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட வில்லை. அந்த வகையில் வாதியின் வழக்கு சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தகுந்த வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு அசலையும் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டித்தொகையுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**9**. மேலும் வாதி வங்கியில்1ம் பிரதிவாதியின் படிப்பிற்காக பிரதிவாதிகள் கல்விக் கடன் பெற்றுள்ளார்கள். 2-ம் பிரதிவாதியின் மகன் 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதி அவரது வாழ்க்கையில் படித்து முன்னேறுவதற்காக மேற்படிப்பிற்காக வாங்கிய கல்விக்கடன் என வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களில் இருந்து பிரதிவாதிகள் வா.சா.ஆ.1-ன் மூலம் கடன் பெற்றுள்ளது நிரூபிக்கப் பட்டுள்ளதால் வாதி வங்கி கேட்டுள்ள வட்டி வீதத்தை குறைத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பி செலுத்தவேண்டும் என இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதி வங்கிக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தொகை ரூ.3,51,903/- ஐ செலுத்த வேண்டும் என்றும் அதில் அசல் தொகை ரூ.75,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 6% வருட

வட்டியுடனும் மற்றும் வழக்குச் செலவுத் தொகையுடனும் திருப்பி செலுத்தவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.10 17:35:48 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

**<u>வாதி தரப்பு சாட்சி-</u>**

வா.சா.1 – மாரியப்பன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்-</u>**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 - | 17.11.2009 - | வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் | - அசல் |
| வா.சா.ஆ.2 - | 17.11.2009 - | வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Demand Promissory Note | - அசல் |
| வா.சா.ஆ.3 - | 25.10.2012 - | வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Revival Letter | - அசல் |
| வா.சா.ஆ.4 - | 30.09.2015 - | வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Revival Letter | - அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 - | 05.09.2018 - | வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Revival Letter | - அசல் |
| வா.சா.ஆ.6 - | 18.08.2021 - | பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய பாக்கி தொகை குறித்த Statement of Account | - உண்மை நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம்-** இல்லை.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.10 17:35:54 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை